முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1511

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.11.2023**, சனிக்கிழமை

1. கலியிடர் வெல்ல வந்த அரங்கனே
கலியுகத்தை இடரில் இருந்து மீட்டு
ஞானயுகமாக மாற்றவந்த குருராஜனே
இனிதே சுப்ரமணியர் யானும் உந்தனுக்கு
2. உந்தனுக்கு இயம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி
உயர்வாக சோபகிருது தேள் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 02 ம் நாள், 18.11.2023, சனிக்கிழமை)
சிந்தைபட அரங்கன் என் நாமஜெபம் போற்றி
சித்தர்கள் பூஜை செய்துகொண்டு வர
3. எந்தவிட தடையுமின்றி அவர்களுக்கு நல்வரம்
இனிதே ஆறுமுகன் என்னால் வாய்க்கும்
வாய்க்கவே ஞானவான்கள் படை வையகமெங்கும் பெருகும் வண்ணம்
ஐயன் முருகன் யான் அரங்கன் வழி அற்புதம் நடத்த
4. அகிலத்தார் அரங்கன் தொடர்பில் இருந்தால் போதும்
அன்னவர்களெல்லாம் ஞானிகள் ஆசியோடு
ஆக்கமும் நல்ல தேற்றமும் கூடி இனிதே
அகிலத்தை மாற்றும் மகா சக்திகளாக
5. வரங்கள் பல பெற்று இனிதே
வையகத்தில் அற்புதங்கள் நடத்துவேன்
நடத்தவே மாதவசி அரங்கனே
ஞானத்தின் சுடராக இருக்க
6. தடையற உலகோர் அனுகிவந்து தீட்சை ஏற்று
தவராஜன் வழிமுறையை தொடர்ந்தால் போதும்
போதுமப்பா உலகமெல்லாம் பேர் அற்புதம்
புண்ணியவழி மாற்றமாக வந்தடைந்து

7. ஆதரவாய் உலகம் எங்கிலும்
அறிவிப்பேன் ஆறுமுகன் அவதார நோக்கம் நிறைவேறி
நிறைவேறி கலியுகம் ஞானயுகமாகும்
நிலவுலகம் சத்தியயுகம் அடைந்து
8. வகைபட ஞானிகள் ஆள
வல்லமைபட தர்மஞான ஆட்சியாக
மாற்றம் பெறக் கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–